# வானவில்

VAANAVIL
ISSUE – 14 FEBRUARY 2012

இதழ் - 14 மாசி 2012


# இலங்கையின் சுதந்திரமும் சுயாதீனமும் பாதுகாக்கப்பட வேண்டும்

இலங்கையின் தேசிய சுதந்திரமும், இறைமையும், பிரதேச ஒருமைப்பாடும், ஸ்திரத்தன்மையும் முன்னொருபோதும் இல்லாத அளவுக்கு பெரும் சவால்களை எதிர்நோக்கி நிற்கிறது.



**பிரித்தானியா காலத்து கொழும்பு புகையிரத நிலையம்** (1860 – 1880)

முன்னொருபோதும் இல்லாத அளவுக்கு என்று வர்ணிப்பதற்கு பொருத்தமான காரணிகள் இருப்பதால், தற்பொழுது ஏற்பட்டுள்ள நிலைமை மிகப் பாரதூரமானது என்றே சொல்லலாம். இலங்கையின் 2500 வருட வரலாற்றில் முன்னரும் பல தேசிய அபாயங்களும் நெருக்கடிகளும் ஏற்பட்டு வந்ததும், அவை எல்லாம் இலங்கை மக்களால் வெற்றிகரமாக முறியடிக்கப்பட்டன என்பதும் உண்மை என்ற போதிலும், தற்போதைய நெருக்கடியையும் நாம் மெத்தனமாக எடுத்துவிட முடியாது.

குறிப்பாக தென்னிந்திய மன்னர்களின் படையெடுப்புகளாலும், அதன்பின்னர் ஒல்லாந்தது, போர்த்துக்கீசியர், ஆங்கிலேயர் ஆகிய வெள்ளைக் காலனித்துவ ஆட்சியாளர்களின் ஆக்கிரமிப்புகளாலும் இலங்கை தனது சுதந்திரத்தை இழந்து காரிருளில் தவித்த வரலாறு உண்டு. இருப்பினும் தனது இடையறாத முயற்சிகளின் காரணமாக, இறுதியாக தனது சுதந்திர ஆவலை அது 1948ம் ஆண்டு பெப்ரவரி 4ம் திகதி பூர்த்தி செய்து கொண்டது.

இந்த ஆண்டு பெப்ரவரி 4ம் திகதி இலங்கை தனது 64வது சுதந்திர தினத்தை மகிழ்ச்சியுடனும் பெருமையுடனும் கொண்டாடியது. ஆனால் இதில் கவலைக்குரிய விடயமென்னவென்றால், சுதந்திரம் கிடைத்த 64 ஆண்டுகளில் சுமார் அரைவாசிக் காலத்தை, அதாவது ஏறத்தாழ 30 ஆண்டுகளை அது உள்நாட்டு யுத்தத்தில் செலவழிக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலையில் இருந்ததுதான்.

இந்த உள்நாட்டு யுத்தம் சகோதர இனங்களுக்கிடையில் ஏற்பட்டது தான் இன்னும் வேதனையானது. இலங்கையை இறுதியாக 250 வருடங்கள் ஆட்சி புரிந்த பிரித்தானிய ஏகாதிபத்தியம் திட்டமிட்டு சிங்கள – தமிழ் மக்களிடையே ஏற்படுத்திச் சென்ற இன முரண்பாடு காரணமாக, கொடிய உள்நாட்டுப் போர் உருவாகி பல்லாயிரக்கணக்கான மனித உயிர்களும், பல கோடி ரூபா சொத்துக்களும் அழிவுக்குள்ளாகின.

ஏகாதிபத்தியம் திட்டமிட்டு இன முரண்பாட்டை உருவாக்கிவிட்டுப் போனதுடன் நின்றுவிடாது, தொடர்ந்தும் இலங்கையை நிம்மதியாக இருக்கவிடாது சதி சூழ்ச்சிகளில் ஈடுபட்டது. ஒருபக்கத்தில் சிங்களப் பேரினவாதிகளைத் தூண்டிவிட்டு சிறுபான்மைத் தேசிய இனத்தவரின் உரிமைகளைப் புறக்கணிக்க வைத்தது. மறுபக்கத்தில் தமிழ் இனவாதிகளைத் தூண்டிவிட்டு பிரிவினைவாதக் கோரிக்கையைக் கிளப்ப வைத்தது. அதாவது 'தொட்டிலையும் ஆட்டிப் பிள்ளையையும் கிள்ளி'விட்டது.

தொடர்ச்சி 15ம் பக்கம் பார்க்க…

# தமிழ் பிற்போக்கு சக்திகளுக்கெதிராக ஐக்கியப்படுங்கள்

1987 ஆண்டில் இலங்கை அரசியல் யாப்பின் பதின்மூன்றாவது திருத்தச்சட்டத்தின் நாற்பத்திரண்டாவது பிரிவின்படி எட்டு மாகாணசபைகள் உருவாக்கப்பட்டு, 1988 ஆண்டில் முதல்முறையாக சகல எட்டு மாகாணங்களிலும் தேர்தல்கள் நடாத்தப்பட்டு மாகாணசபைகள் அமைக்கப்பட்டன. 1988 ஆண்டு டிசம்பர் மாதம் தெரிவு செய்யப்பட்ட வடக்கு கிழக்கு மாகாணசபையானது மிகக்குறுகிய காலமே செயற்பட்டு, புலிகளின் வற்புறுத்தல்களுக்கிணங்க பிரேமதாசா அரசால் 1990 ஆண்டு, யூன் மாதம் கலைக்கப்பட்டது.

அதன்பின்னர் வடக்கு கிழக்கு மாகாணசபைக்கென தேர்தல் எதுவும் நடாத்தப்படவில்லை. வடக்கு கிழக்கு மாகாணசபை உருவாக்கப்பட்டு 19 ஆண்டுகளின் பின்னர், 2006 ஆண்டில் இலங்கை உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பொன்றின்படி, இணைந்த வடக்கு கிழக்கு மாகாணசபை தனித்தனி மாகாணசபைகளாக பிரிக்கப்பட்டது.

தனியாக பிரிக்கப்பட்ட கிழக்கு மாகாணசபைக்கான தேர்தல் முதல்முறையாக 2008 ஆண்டு மே மாதம் நடாத்தப்பட்டு, ஐக்கிய மக்கள் சுதந்திர மக்கள் கூட்டமைப்பு அமோக வெற்றியை ஈட்டியது. இத்தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திர மக்கள் கூட்டமைப்பின் வெற்றிலை சின்னத்தின்கீழ் தமிழீழ மக்கள் விடுதலைப்புலிகளும் இலங்கை முஸ்லீம் காங்கிரசும் இணைந்து போட்டியிட்டன. தமிழீழ மக்கள் விடுதலைப்புலிகள் சார்பில் முதலமைச்சராக பதவியேற்ற சி.சந்திரகாந்தன் தலைமையிலான கிழக்கு மாகாணசபை நிர்வாகம், கிழக்கு மாகாணத்தை அபிவிருத்தி பாதையில் கொண்டு செல்வதில் வெற்றி கண்டுள்ளது.

கிழக்கு மாகாணசபைக்கான தேர்தல் வெற்றிகரமாக நடாத்தப்பட்டதை போலவே, தனியாக பிரிக்கப்பட்ட வடக்கு மாகாணசபைக்கான தேர்தலும் விரைவில் நடாத்தப்படலாமென்ற ஊகங்கள், 2009 ஆண்டு மே மாதம் புலிகள் தோற்கடிக்கப்பின்னரான காலப்பகுதியிலிருந்து நிலவி வருகின்றது. ஆனால் புலிகளை தோற்கடித்ததை பயன்படுத்தி, ஜனாதிபதி தேர்தலையும் பாராளுமன்ற தேர்தலையும் 2009, 2010 ஆண்டில் நடாத்தி தனது அதிகாரத்தை தக்கவைத்துக் கொண்ட ஐக்கிய மக்கள் சுதந்திர மக்கள் கூட்டமைப்பு தலைமையிலான அரசு, வடக்கு மாகாணசபைக்கான தேர்தல் தொடர்பாக எந்த அறிவிப்பையும் இன்னமும் வெளியிடவில்லை. ஆனால் தமிழ் தேசிய கூட்டமைப்பு மற்றும் ஈழ மக்கள் ஜனநாயகக்கட்சி (ஈபிடிபி) போன்ற கட்சிகள் நீண்ட காலமாகவே வடக்கு மாகாணசபைக்கான நிர்வாகத்தை கைப்பற்றுவதறகான தயாரிப்பில் தம்மை ஈடுபடுத்தி வருகின்றனர். 2010 ஆண்டு பாராளுமன்ற தேர்தலில் வடக்குக்கிழக்கில் தமிழ் தேசிய கூட்டமைப்பு பெருவெற்றியை ஈட்டியதால், வடக்கு மாகாணசபைக்கான தேர்தலிலும் அவர்களே வெற்றி பெறுவார்கள் என்ற அபிப்பிராயம் எல்லா தரப்பினரிடையேயும் நிலவுகின்றது. இதனால் தமிழ் தேசிய கூட்டமைப்பிடம் சோரம் போகும் மனப்பாங்கே ஈபிடிபி தவிர்ந்த ஏனைய தமிழ் கட்சிகளிடம் உருவாகியுள்ளது.

பதின்மூன்றாவது திருத்தச்சட்டத்தினையாவது வடக்குக்கிழக்கில் அமுல்படுத்துமாறே காலங்கடந்து இப்போது பல முனைகளிலிருந்தும் கோரிக்கைகள் வருகின்றன. எனவே இந்த திருத்தச் சட்டத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட மாகாணசபை நிர்வாகத்திற்கான தேர்தல் என்பது மிகவும் முக்கியமானது. காலங்காலமாக தமிழ் பிற்போக்கு சக்திகளை பிரதிநிதித்துவப்படுத்திய தமிழ் தலைமைகளின் தற்போதைய அவதாரமான தமிழ் தேசிய கூட்டமைப்பை அரசியல் ரீதியாக தோற்கடிக்க விரும்பும் ஏனைய தமிழ் கட்சிகள், இந்த தேர்தலை சரியாக பயன்படுத்த வேண்டும். வடக்கு மாகாணசபைக்கான தேர்தல் திகதி அறிவிக்கப்பட்ட பின்னர் தேர்தலில் கூட்டுச்சேர்வது பற்றி ஆலோசிக்காமல் இப்போதே தமது செயற்பாடுகளை ஒருமுனைப்படுத்துவது நல்லது. ஒருபோதும் தோற்கடிக்கப்பட முடியாது என்று கருதப்பட்ட புலிகளும் தோற்கடிக்கப்பட்டார்கள் என்பதை மனதிற்கொண்டு, தமிழ் பிற்போக்கு சக்திகளுக்கு எதிராக ஐக்கியப்படுங்கள். இல்லாவிடின் இந்த ‘ஏனைய தமிழ் கட்சிகள்’ தமிழ் பிற்போக்கு சக்திகளை தோற்கடித்து புதிய தலைமை உருவாகுவதற்கு தடையாக இருக்கிறார்கள் என்றே கருத இடமுண்டு.

**வானவில்**

**தொடர்பு முகவரி:** ‘வானவில்’ இதழுக்கு கட்டுரைகள், துணுக்குகள், தகவல்கள், விமர்சனங்கள், ஆலோசனைகள் என்பனவற்றை அனுப்ப விரும்புபவர்களும், இதழ்களைப் பெறவிரும்புபவர்களும் மற்றும் அனைத்துத் தொடர்புகளுக்கும் பின்வரும் மின்னஞ்சல் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.
sunvaanavil@gmail.com

**இன்னொருவர் கண்ணோட்டம்**

மாஸ்கோவில் பிரதமர் விளாடிமிர் புதினை எதிர்த்துப் பொதுமக்கள் நடத்திய பேரணியின் தொடர்ச்சியாக, உலகின் கவனத்தைத் திசை திருப்பி இருக்கிறார்கள் ரஸ்யர்கள்…..

ரஸ்யர்களின் இந்த எழுச்சியை அரபு உலக எழுச்சியின், 'மல்லிகைப் புரட்சி'யின் தொடர்ச்சியாக எல்லோரும் பார்க்கிறார்கள். நாம் சற்று பின்நோக்கிப் பார்க்கலாம்.

சோவியத் சமவுடைமைக் குடியரசுகளின் ஒன்றியம் (USSR) உடைந்த 20வது ஆண்டு இது. இந்தத் தலைமுறைக்கு அறிமுகமில்லாத இந்தப் பெயர்தான் 20 ஆண்டுகளுக்கு முன்பு வரை உலகின்



# யார் ஆள வேண்டும் என்பதை மக்களால் ஏன் தீர்மானிக்க முடியவில்லை?

நிலப்பரப்பில் பாதியைத் தன் கட்டுப்பாட்டில் வைத்திருந்தது. இரு உலகப் போர்களின் முடிவுகள் மோசமானவர்களின் கைகளில் சிக்கிக் கொள்ளாமல் பார்த்துக் கொண்டது. முக்கியமாக அமெரிக்காவின் இன்றைய ஏகாதிபத்திய அரசியலுக்குப் பெரும் தடையாக இருந்தது.

இந்தியாவைத் தாண்டி இந்தியர்களால் அதிகம் நேசிக்கப்பட்ட தேசம் சோவியத் ஒன்றியமாகவே இருக்கும்…சோவியத் ஒன்றியத்தின் நண்பர்களாக இருந்த ஒவ்வொரு நாட்டிலும் டால்ஸ்டாய்கள், லெனின்கள், ஸ்டாலின்கள் முளைத்தார்கள். அந்த நாட்களில் தமிழகத்தில் மோகமுள்ளும் பொன்னியின் செல்வனும் இல்லாத வீடுகளிள்கூட மார்க்ஸிம் கார்க்கியின் 'தாய்' புத்தகம் இருக்கும்.

ஆனால் ஒருநாள் எல்லாம் சிதைந்தது. சோவியத் ஒன்றியத்தில் இருந்த குடியரசுகள் தனி நாடாகப் பிரிந்து செல்ல விரும்பின. ரஸ்யர்களே தங்களுடைய வளங்கள் ஏன் மற்றவர்களுக்குப் பங்கிடப்பட வேண்டும் என நினைத்தார்கள். முதலாளிகளாகத் துடித்தார்கள். தேசிய இனப் போராட்டங்கள் ஜனநாயக வேட்கையுடன் கைகோர்த்தன.

1991 ஆகஸ்ட் 19ம் திகதி அதிபரும் சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலருமாகிய கோர்பசேவ் கடமைகளை நிறைவேற்ற முடியாத நிலையில் இருப்பதாகக் கூறி, ஆட்சிக் கவிழ்ப்பு நாடகம் அரங்கேறியது. கோர்பசேவ் இடத்தில் கட்சியின் துணைப் பொதுச் செயலாளர் கென்னடி யானேவ் அமர்ந்தால், மக்கள் போராட்டங்களை அவரால் அடக்கிவிட முடியும் என நம்பினார்கள். ஆனால் நடந்ததோ வேறு. ருஸ்யா தனிநாடாக வேண்டும் என்று முழங்கிய போரிஸ் எல்ட்சின் ஒரே நாளில் பெரும் சக்தியாக உருவெடுத்தார்.

மக்கள் ஜனநாயகத்தை விரும்பினார்கள். ஆனால் அது இன்றுவரை அவர்களுக்குக் கிடைக்கவில்லை. மேலும் தங்களது வளமான வாழ்வையும் பறிகொடுத்து இருக்கிறார்கள்.

இந்தக் கதையை இப்போதைய அரபு உலகின் எழுச்சியோடு ஒப்பிட்டுப் பாருங்கள். எகிப்தில் சர்வாதிகாரி ஹோஸ்னி முபாரக்கை ஆட்சியிலிருந்து விரட்டியவர்களுக்கு இப்போது கிடைத்திருப்பது…இராணுவத்தின் ஆட்சி. லிபியாவில் கடாஃபியின் கதையை முடித்தவர்களுக்கு இப்போது

கிடைத்திருப்பது…ஒரு பொம்மை அரசாங்கத்தின் ஆட்சி. நாளை சிரியாவில், ஏமனில், இரானில்…

மக்களால் யார் ஆளக்கூடாது என்பதைத் தீர்மானிக்க முடிகிறது. யார் ஆள வேண்டும் என்பதை ஏன் தீர்மானிக்க முடியவில்லை? ஒரு வலுவான சித்தாந்தமும் தொலைநோக்கும் உள்ள மக்கள் தலைவனும் இல்லாத இடத்தில் உருவாகும் மக்கள் எழுச்சியால் ஒரு கட்டமைப்பை அழிக்க முடியுமே தவிர, உருவாக்க முடியாது. யார் ஆள வேண்டும் என்பதைத் தீர்மானிக்கும் புரட்சியை எப்படி முன்னெடுப்பது என்று ரஸ்யர்கள் தங்கள் முன்னோரிடம் இருந்து கற்றுக் கொள்ளலாம்!

(இது 'ஆனந்த விகடன்' இதழில் சமஸ் என்பவர் எழுதிய 'மாஸ்கோ மல்லிகை' என்ற கட்டுரையின் முக்கியமான பகுதிகளாகும். அவர்களுக்கு எமது நன்றி.) *

# மீள் குடியேற்ற நிகழ்வில் கலந்து கொள்ள இரா.சம்பந்தனுக்கு நேரம் இல்லை!

உள்நாட்டில் இடம்பெயர்ந்து வவுனியா மெனிக் ஃபாம் முகாமில் தங்க வைக்கப்பட்டிருந்த முல்லைத்தீவு முள்ளிவாய்க்கால் பிரதேச மக்களை, புதுக்குடியிருப்பு கோம்பாவில் பகுதியில் மீள் குடியேற்றும் நிகழ்வு பெப்ரவரி 07ம் திகதி நடைபெற்றது. இந்நிகழ்வில் மீள்குடியேற்ற அமைச்சர் குணரட்ன வீரக்கோன், பிரதி அமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் மற்றும் அரச உயரதிகாரிகள் கலந்துகொண்டனர்.

இதில் கலந்துகொண்ட அமைச்சர் குணரத்ன பேசுகையில், இந்த நிகழ்வில் கலந்து கொள்ளும்படி தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்றக்குழுத் தலைவர் இரா.சம்பந்தன் அவர்களுக்கு தொலைபேசி மூலம் அழைப்பு விடுத்தும், அவர் அதில் கலந்து கொள்ளவில்லை என மிகவும் கவலையுடன் குறிப்பிட்டார்.

மேலும் அவர் அங்கு பேசுகையில், "இந்த மக்கள் முகாம்களில் தங்க வைக்கப்பட்டிருந்த காலப்பகுதியில் ஒரு தடவையேனும் பாராளுமன்ற உறுப்பினர் இரா.சம்பந்தன் அவர்களைச் சென்று பார்வையிடவில்லை. அதுமட்டுமின்றி இந்த மக்களின் மருத்துவ தேவைகளுக்காக நாடாளுமன்ற உறுப்பினர் சம்பந்தன் ஒரு டிஸ்பிரின் மருந்து வில்லையைத் தன்னும் வழங்கவில்லை. அனைத்து உதவிகளையும் படையினரே இந்த மக்களுக்குச் செய்தனர்" எனக் குறிப்பிட்டார்.

கௌரவ அமைச்சர் குணரத்தின அவர்களே! யார் உங்களுக்குச் சொன்னது தமது மக்களுக்கு சேவை புரியத்தான் இந்த தமிழ் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்களை மக்கள் தெரிவு செய்தார்கள் என்று? அவர்கள் அமெரிக்காவுக்கும் பிரித்தானியாவுக்கும் இந்தியாவுக்கும் அரசாங்கம் வழங்கியுள்ள அதி விசேட பிரமுகர்களுக்கான கடவுச் சீட்டில் சுற்றுலா சென்று, அங்கு இலங்கை அரசாங்கம் இடம் பெயர்ந்த தமிழ் மக்களை சொந்த இடங்களில் குடியமர்த்தாமல், முள்கம்பி முகாம்களுக்குள் தடுத்து வைத்து கொடுமைப்படுத்துகிறது என்று பிரச்சாரம் செய்வதற்கல்லவா அவர்களைத் தமிழ் மக்கள் தமது பிரதிநிதிகளாகத் தெரிவு செய்துள்ளார்கள்! அப்படியிருக்க இந்த இடம்பெயர்ந்த 'பரதேசி சனங்களை' மீள் குடியேற்றும் நிகழ்வில் அவர்களுக்குக் கலந்து கொள்ள நேரமேது?

அவர்களது இந்த 'மக்கள் சேவைகளை'த் தமிழ் மக்கள் எப்பொழுது புரிந்துகொண்டு, மந்த புத்தியிலிருந்து விடுபடப் போகிறார்கள் என்பதுதான் தெரியவில்லை.

**- வி.பாலசிங்கம், 12ம் கட்டை, விசுவமடு**

# இந்திய உதவியுடன் வவுனியா - காங்கேசன்துறை புகையிரத சேவை புனரமைப்பு

வவுனியாவுக்கும் காங்கேசன்துறைக்கும் இடையிலான புகையிரத சேவையை ஆரம்பிக்கும் பொருட்டு, அந்தப் பாதையை சீரமைக்கும் பணிகள் இந்திய உதவியுடன் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அதன் ஆரம்ப பணிகளை இந்தியத் தூதுவர் அசோக் காந்தா 2012 ஜனவரி 18ம் திகதி யாழ்.புகையிரத நிலையத்தில் ஆரம்பித்து வைத்தார்.

கடந்த காலப் போரின் போது காங்கேசன்துறைக்கான புகையிரத சேவைகள் முற்றிலுமாகத் தடைப்பட்டதுடன், புகையிரதப் பாதையில் இருந்த தண்டவாளங்கள், சிலிப்பர் கட்டைகள் என்பன புலிகளினால் பதுங்கு குழிகள் அமைப்பதற்காக கழற்றியும் செல்லப்பட்டன. அத்துடன் கைவிடப்பட்ட புகையிரத நிலைய கட்டிடப் பொருட்களும் தளபாடங்களும் சூறையாடப்பட்டும் இருந்தன. பல புகையிரத நிலையங்களில் இடம் பெயர்ந்த மக்கள் தற்காலிக வசிப்பிடங்களையும் அமைத்திருந்தனர். சிலர் புகையிரத சேவைக்குச் சொந்தமான காணிகளை கையகப்படுத்தியும் இருந்தனர்.

தற்போது இச்சேவை புனரமைக்கப்படுவதின் மூலம், பொதுமக்களும் அரச ஊழியர்களும் இலகுவாகவும் குறைந்த செலவிலும் பயணம் செய்யக்கூடிய வாய்ப்பு ஏற்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. *

# கனடிய தமிழ் குழந்தை கடற்கரையில் விளையாடுகிறது! வன்னிக் குழந்தை அனாதை இல்லத்தில் வாடுகிறது!! வாரம் ஒரு டொலரை இந்தக் குழந்தைக்குக் கொடுங்கள்!!!

*'மஹாதேவா ஆச்சிரமம் - குழந்தைகள் இல்லம்' என்பது அதன் பெயர். அங்கு 296 குழந்தைகள் இருக்கிறார்கள். அவர்களில் 160 பேர் பெண் குழந்தைகள். ஆச்சிரமத்தில் தங்கியிருக்கும் குழந்தைகளில் சிலர் அனாதைகள் அல்ல. அவர்களுக்குப் பெற்றோர்கள் இருக்கிறார்கள். ஆனால் அவர்கள் எல்.டி.டி.ஈயில் இருந்தவர்கள் என்பதால், கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டிருக்கிறார்கள்.*

*"ஆச்சிரமத்தில் உள்ள குழந்தைகளுக்கு நாள் ஒன்றுக்கு தலா 16 ரூபாய் 66 காசுகளைத்தான் அரசாங்கம் ஒதுக்கி இருக்கிறது. (16 ரூபாய் 66 காசுகளுக்கு கொழும்பு நகரில் ஒரு கோப்பைத் தேநீர் கூட வாங்க முடியாது). அரசு ஒதுக்கீடு செய்திருக்கிற இத்தொகையும் மிக மெதுவாகத்தான் வருகிறது. கருணை உள்ளம் கொண்ட வெளிநாடு வாழ் தமிழர்கள் சிலரிடம் இருந்து கொஞ்சம் நன்கொடைகள் கிடைக்கின்றன. ஆனால், அதுவும் கூட கடந்த மூன்று மாதங்களாக வற்றிப் போய்விட்டன" என்று ராஜநாயகம் குறிப்பிட்டார்.*

*ராஜநாயகம் கிளிநொச்சியின் அரசாங்க ஏஜண்டாக 16 வருடங்கள் பணியாற்றியவர்... இப்போது மஹாதேவ ஆச்ரம குழந்தைகள் இல்லத்தின் மேலாளராக இருக்கிறார். மிகச் சிறிய அளவிலான உதவிகள் கூட ஆச்ரமத்தில் தங்கியிருக்கும் குழந்தைகளுக்கு நன்மை பயக்கும் என்பது யதார்த்த நிலையாக இருக்கிறது. அப்படி நன்கொடை அளிக்க விரும்புவர்கள் மிகவும் நேர்மையான, குழந்தைகள் இல்லச் சேவையில் தன்னை முழுமையான அக்கறையுடன் ஈடுபடுத்திக் கொண்டிருக்கும் இந்த ஆச்ரம நிர்வாகயைத் தொடர்பு கொள்ளலாம். அவரது தொலைபேசி எண்: 94770604950.*

*கனடா நாட்டில் இருந்து ஏராளமான குடும்பங்கள் சுற்றுலாப் பயணிகளாக பட்டிகோலா (மட்டக்களப்பு) கடற்கரையில் வந்து குவிகிறார்கள். அந்தக் குடும்பங்களைச் சார்ந்த கடற்கரையில் விளையாடிக் கொண்டு இருக்கும் ஒரு குழந்தை, யாழ்ப்பாணத்தில் உள்ள தனது மூதாதையர் வீட்டிற்கு வந்திருக்கிறது. அந்தக் குழந்தையின் தந்தை, 'பாதுகாக்கப்பட்ட பகுதி' என்ற பெயரால் ராணுவத்தின் கட்டுப்பாட்டில் வைக்கப்பட்டிருக்கும், தனது குடும்பத்தின் விளைநிலத்தை மீட்கும் ஏற்பாடுகளைச் செய்வதற்காக வந்திருக்கிறார். கனடாவிலிருந்து வந்த குழந்தை கவலையற்று விளையாடிக் கொண்டிருக்கிறது. அனாதையாக ஆச்ரமத்தில் தங்கி இருக்கும் குழந்தைகள் அரசாங்க மான்யத்தையும், வெளிநாடுகளில் வாழும் தமிழர்களின் நன்கொடையையுமே சார்ந்து இருக்கின்றன....*

*- இந்தியப் பத்திரிகையாளர் பகவான் சிங் சமீபத்தில் இலங்கை சென்று வந்த பின்னர் (தமிழர்களுக்கு எதிரானது என தமிழ் தேசிய வெறியர்களால் வர்ணிக்கப்படும்) 'துக்ளக்' இதழில் தொடராக எழுதிவரும் கட்டுரையின் ஒரு பகுதியே மேலே பிரசுரிக்கப்பட்டுள்ளது.*

*தமிழ் இனவாத சக்திகளால் ஆரம்பிக்கப்பட்டு, புலிகளால் முன்னெடுத்துச் செல்லப்பட்ட 'தமிழீழ' தனிநாட்டுப் போராட்டம் எத்தகைய கொடூரங்களை ஈழத்து மண்ணில் உருவாக்கியிருக்கிறது என்பதின் ஒரு சிறு அடையாளமே மகாதேவ ஆச்சிரம குழந்தைகள். தமிழ் மக்களை ஒட்டச் சுரண்டி ஒட்டாண்டிகளாக ஆக்கிய புலிகள் இப்பொழுது இல்லையெனினும், அவர்களது பெயரால் வயிறு வளர்க்கும் டசின் கணக்கான அமைப்புகள் புலம்பெயர் தமிழர் சமூகத்தில் இயங்கி வருகின்றன. அதில் ஒன்று 'நாடு கடந்த தமிழீழ அரசாங்கம்'. அது இப்பொழுது வாரம் ஒரு டொலர் கேட்டு புலம்பெயர் தமிழர்களிடத்தில் உண்டியல் குலுக்க ஆரம்பித்திருக்கிறது. உண்மையில் புலம்பெயர் தமிழர்கள் தாயகத் தமிழர்களுக்கு ஏதாவது நன்மைகள் செய்ய விரும்பினால், அந்த வாரம் ஒரு டொலரை இந்த மகாதேவா ஆச்சிரமம் போன்ற இடங்களில் பரிதவிக்கும் அனாதைக் குழந்தைகளுக்கு வழங்குவதே சரியாகவும் புண்ணியமாவும் இருக்கும்.*

*புலம் பெயர் தமிழர்களே இதுபற்றி சற்று மனம் விட்டுச் சிந்தியுங்கள். **

---

**'பாதை இல்லையென்று கலங்காதே.... உருவாக்கு'**

**– லெனின்**

# திரையிசைப் பாடல்களின் ஆதிக்கமும் இசைநாடகத்தின் தாக்கமும்



தமிழ்த்திரையிசை, அவ்வப்போது மேற்கத்தைய இசைக்கோலங்களின் (Jazz, Rock,Hip Hop, Rnb, Rap,… இத்யாதி) ஆக்கிரமிப்புக்கு அல்லது அலைக்கழிப்பிற்கு உட்பட்டுவந்தாலும், அது ஏற்படுத்தும் தாக்கத்தை அல்லது பரபரப்பை எவரும் குறைத்து எடைபோட்டு விடமுடியாது. 1887இல், Emile Berliner என்ற ஜேர்மனியரால் கண்டுபிடிக்கப்பட்ட Gramophone காலத்திலிருந்து, இன்றைய கையடக்க சாதனங்களான, mp3 player, mp4 player, ipod, ipad, iphone… வரைக்குமான பாதிப்பை எவரும் சட்டை செய்து விடமுடியாது. ஆனால் இதையடக்கியாண்ட இசையமைப்பாளர்களும் இருந்திருக்கிறார்கள். இருந்துதான் வருகிறார்கள் என்பதையும் மறுப்பதற்கில்லை.

1967இல், திருவருட்செல்வர் படத்தில் இடம்பெற்ற "நாதர்முடிமேலிருக்கும் நல்லபாம்பே உனக்கு நல்லபெயர் வைத்தவர் யார் சொல்லு பாம்பே" என்ற பாடலைக் கேட்காதவர்கள் இல்லையென்றே சொல்ல முடியும். இதனை யாத்தவர் கண்ணதாசன். இசைவடிவம் கே.வி. மகாதேவன். பாடல், சௌந்தரராஜனின் குரலில் *புன்னாகவராளி* இராகத்தில் நனைந்தது. இதனை Gramophone இல் கேட்ட ஞாபகம் இன்றளவும் எமக்கு பசுமரத்தாணிபோலுள்ளது.

1950இல் வெளிவந்த திகம்பரசாமியார் படத்திற்காக இதே முதலடியையொத்த இன்னொருபாடலையும் "நாதர்முடி மேலிருக்கும் நாகபாம்பே நச்சுப்பையை வைத்திருக்கும் நல்லபாம்பே" என்று மலையாளப் பெண்மணியான பீ.லீலாவும் (1935) பாடியுள்ளார். அதனையும் *புன்னாகவராளியிலேயே* ஜி.ராமநாதன் வடித்திருந்தார். லீலா, தனது 12ஆவது வயதில் பாட ஆரம்பித்தவர். கிட்டத்தட்ட பின்னனிப்பாடல்முறையின் வருகையோடு, 1940 களின் பிற்பகுதியில் திரையுலகில் நுழைந்தவர். "தாழையாம் பூமுடித்து தடம்பார்த்து நடைநடந்து" (பாகப்பிரிவினை, 1959, கண்ணதாசன், விஸ்வநாதன் – ராமமூர்த்தி), "காத்திருப்பான் கமலக்கண்ணன்", (1958 – உத்தமபுத்திரன், ஜி.ராமநாதன்) "முகத்தில் முகம்பார்க்கலாம் விரல்நகத்தில் பவளத்தின் நிறம்பார்க்கலாம்" (1959, தங்கப்பதுமை, பட்டுக்கோட்டைக் கல்யாணசுந்தரம், விஸ்வநாதன் – ராமமூர்த்தி) போன்ற பாடல்கள் அவரின் தனித்துவத்துக்கான எடுத்துக்காட்டுகள்.

சாவேயில்லாத வீடுகளில் கடுகு எடுக்கமுடியாததுபோல் பாடல்களேயில்லாத தமிழ்த்திரைப்படங்களை கற்பனைசெய்தே பார்க்கமுடியாது. தமிழ்த் திரைப்படங்கள், பாடல்களால் நீக்கமற நிறைந்திருந்ததுதான் வரலாறு. 1930களில் வெளிவந்த படங்களில், (1931இல்தான் காளிதாஸ் என்ற முதல் தமிழ்ப்பேசும்படம் வெளிவந்தது.) குறைந்தபட்சம் 20 பாடல்களோ அல்லது அதற்கும் அதிகமாகவோ இடம்பெற்றன. 1934இல் பாட்டு நட்சத்திரமான சி.எஸ்.ஜெயராமன் நடித்த படங்களான கிருஸ்ணலீலாவில் 60 பாடல்கள், 1935இல் வெளியான பக்ததுருவனில் 52 பாடல்கள், 1936இல் வெளிவந்த லீலாவதிசுலோசனாவில் 45பாடல்கள் என நிரம்பிவழிந்தன. அவரது இசையாளுமைக்கு 1958இல் வெளிவந்த சம்பூரணராமாயணம் ஓரெடுத்துக்காட்டு. அவர் ஒரு சில படங்களுக்கும் இசையமைத்துள்ளார்.

1930களில் பாடல்கள் மலிந்த இசைநாடகங்களே திரைப்படங்களாக அவதரித்தன. தியாகராஜபாகவதரும் எஸ்.டி.சுப்புலட்சுமியும் இணைந்து நடித்த இசைநாடகமான பவளக்கொடியே 1934இல் திரைப்படமாக அவதரித்தது. பாகவதரின் நாடகங்களுக்கு ஆர்மோனியம் வாசித்துவந்த ஜி.ராமநாதனே படத்திற்கும் இசையமைத்திருந்தார். அதுவும் 50பாடல்களால் நிரம்பியிருந்தன. இதே நாடகம், 1949இல் ரீ.ஆர்.மகாலிங்கம் ஐந்து வேடங்களில் நடித்து 28 பாடல்களுடன் படமாக வெளிவந்தது. 1941இல் ஆர்யமாலா என்ற படத்தில் பி.யு.சின்னப்பா 10 வேடங்களில் நடித்ததையும், 1944இல் ஐந்து வேடங்களில் நடித்த ஜகதலப்பிரதாபன் என்றபடம் சிவாஜியின் திருவிளையாடலுக்கு அடியெடுத்துக் கொடுத்ததென்பதையும் மேலதிக தகவலாக

இவ்விடத்தில், பகிர்ந்துகொள்வது பொருத்தமானதே.

புராண இதிகாசக்கதைகளே படமாகமலர்ந்ததும் அவைசெய்யுள் வடிவிலிருந்ததுமே பாடல்கள் நிறைந்திருப்பதற்கான காரணம். உதாரணமாக கம்பராமாயணம், மகாபாரதம் போன்றன செய்யுள் வடிவிலேயே அமைந்திருந்தன. மகாபாரதத்தை, வெண்பாவில் பெருந்தேவனாரும், விருத்தப்பாவில் வில்லிபுத்தாழ்வாரும் வடித்திருந்தனர். இதனாலேயே பிறிதுமொழிதலணிபோல், பாட்டின் ரூபத்தில் படத்தின்கதை வெளிப்பட்டது. பிறிதுமொழிதல் அணிவகைக்குள்ளேயே பழமொழிகளும் அடங்கும்.

இத்தகைய போக்குகளிலிருந்தே சங்கரதாஸ் சுவாமிகளும் காப்பியங்களையே இசைநாடகமாக வடித்தார். இசைநாடகத்தின் மரபு பாரசீகம் என்று சொல்லப்படுகிறது. இவரின் பவளக்கொடி நாடகமே, பின்னாளில் திரைப்படமாகப் பரிணமித்தது. 1867இல் தூத்துக்குடியில் பிறந்த சங்கரதாஸ்சுவாமிகள், வெறும் 55 ஆண்டுகளே வாழ்ந்தார். 16வயதிலேயே சொந்தமாகக் கவிபுனையும் ஆற்றலைப்பெற்ற சுவாமிகள், 40 இற்குமேற்பட்ட நாடகங்களை யாத்துச்சென்றுள்ளார். பவளக்கொடி, வள்ளிதிருமணம், சத்தியவான் சாவித்திரி, அரிச்சந்திரமயானகாண்டம், கோவலன், நளதமயந்தி, நல்லதங்காள், ஞானசௌந்தரி, மார்க்கண்டேயர், சிறுத்தொண்டர், அபிமன்யுசுந்தரி, வாலிமோட்சம், சதிஅனுசூயா, லங்காதகனம், மன்மததகனம், லவகுச, பிரகலாதன், காந்தர்வதத்தை, ராம – ராவணயுத்தம், முதலான நாடகங்களைப் படைத்ததோடு மட்டுமல்லாமல், பம்மல் சம்பந்தமுதலியாரின் மனோகரா என்ற நாடகத்திற்கும் இவரே பாடல்களையும் யாத்திருந்தார். 1964இல் சிவாஜி ஒன்பது வேடங்களில் நடித்த நவராத்திரி படப்பாடல்களிலும் இவரது பங்களிப்பு இருந்திருக்கிறது.

இவர், 1914 இல் உருவாக்கிய சமரச சன்மார்க்க நாடகசபை, 1918இல் உருவாக்கிய Boys company போன்ற நாடகப்பட்டறைகளிலிருந்தே எஸ்.ஜி. கிட்டப்பா, ரி.கே.சண்முகம், ரி.கே. பகவதி, பி.யு.சின்னப்பா, ரி.ஆர்.மகாலிங்கம், வி.என்.சுந்தரம், கே.ஆர்.ராமசாமி, எஸ்.எஸ்.ராசேந்திரன், என்.எஸ்.கிருஸ்ணன், எம்.ஜி.ஆர், எம்.ஆர்.ராதா, ஏ.பி.நாகராஜன், போன்ற கலைஞர்கள் உருவாக்கப்பட்டார்கள்.

இவர், ஜமதர்மராஜன், இரணியன், இராவணன், சனீஸ்வரன் போன்ற புராணஇதிகாசத்தில் வரும், வில்லன் பாத்திரங்களையே (Mythical antagonist roles) ஏற்று நடித்ததாகத் தெரியவருகிறது. இவரது இன்னிசை நாடகங்கள், தமிழ்நாட்டின் மதுரை, ராமநாதபுரம், புதுக்கோட்டைப் பகுதிகளில் இன்றளவும் நடிக்கப்பட்டு வருவதாகத் தெரியவருகின்றது.

இவர், 1900 அளவில் யாழ்ப்பாணம் வந்து, கலைஞர்களுக்குப் பயிற்சியளித்ததாகவும், இவரே பூதத்தம்பி நாடகம் எழுதியதாகவும் நம்பப்படுகிறது. இது சரிபார்க்கப்படவேண்டும். டச்சுக்காலத்தில், (ஒல்லாந்தர்) சுதேசமக்களிலிருந்து உருவாக்கிய ஒரு மந்திரியே பூதத்தம்பி. டச்சு அதிகாரியொருவர், பூதத்தம்பியின் மனைவிமீது மையல்கொள்ளும் கதையே பூதத்தம்பியென்ற இசைநாடகம். இந்நாடகம், 1980களின் முற்பகுதிவரை வடமாராட்சியின் அல்வாய்ப்பகுதியில் மேடையேற்றுப்பட்டு வந்ததாக அறியப்படுகிறது.

1982இல், நாடகச்சக்கரவர்த்தியென பேராசிரியர் வித்தியானந்தனால், கௌரவிக்கப்பட்ட எமது வி.வீ. வைரமுத்துவும் (1924) இவரது பாதிப்பிலேயே வந்தவர். இவரது „மயானகாண்டம்" மக்கள் விரும்பி விரும்பிக்கேட்டதற்கிணங்க 3000 தடவைகளிற்கு மேலாக மேடையேற்றப்பட்டதாகக் கூறப்படுகிறது. இவர் பாட்டு நட்சத்திரம் மட்டுமல்லாது, மிருதங்கம், வயலின், போன்ற இசைக்கருவிகளையும் கையாளும் விற்பன்னராகத் திகழ்ந்தவர்.

சங்கரதாஸ் சுவாமிகளின், சத்தியவான் சாவித்திரிநாடகம் வைரமுத்துவினாலும் மேடையேற்றப்பட்டதுதான். இந்நாடகத்தில் வந்த

*" ஏனோ எனை எழுப்பலானாய் மடமானே*
*எனக்கதனை யுரைக்க வேண்டும்*
*இசைந்து கேட்பேன் நானே*

*சிங்கத்தால் நானடைந்த துன்பம் தீர்த்ததாலே*
*செய்தநன்றி எண்ணி வந்தேன்*
*சேர்ந்த அன்பினாலே*
*எந்தவூரோ இருப்ப தேது பேர்யார் தந்தை*
*இன்றெனக்கு நீயுரைத்தால்*
*இன்பம் கொள்ளும் சிந்தை*
*அழகிய மத்ராபுரி அஷ்வபதி பூத்ரி*
*அக்கம் பக்கத்தோர்கள் எனை*
*அழைக்கும் பேர் சாவித்ரி*
*இன்னும் மணமானதோ இல்லையோ சொல்லு*
*இச்சை கொண்டே கேட்பதற்கே*
*அச்சமுமாகாது.*
*சொல்ல வெட்டமாகுதே ஓகோ..*
*சொல்ல வெட்கமாகுதே இன்னும் மணமில்லை.*
*சொந்தமான தந்தைதாயார் என்னிடமுமில்லை."*

சங்கரதாஸ்சுவாமிகள் எழுதிய இந்தப்பாடலை இன்றளவும் எம்மால் மறக்க முடியாது. மீட்டுப் பார்க்க விரும்புவோர் ஒருமுறை நவராத்திரி படத்தைப் பார்க்கவும். அதில், சாவித்திரியின் அநாயசமான, எதற்கும் நெகிழ்ந்து கொடுக்கக்கூடிய நடிப்பாற்றலையும் கண்டுகளிக்க

முடியும். *ஆபேரி* இராகத்திலமைந்த மெட்டின் பிரதிபலிப்பே, 2004இல் வெளிவந்த தேவதையைக்கண்டேன் படத்தில் இடம்பெற்ற, தேவாவின் இசையில் வந்த "அழகே பிரம்மனிடம் மனுக்கொடுக்கப் போயிருந்தேன் – நீ என் மனைவியாகவேண்டுமென்று" என்ற பாடல்.

*ஆபேரி* இராகத்தில் வேறும் பலபாடல்கள் முன்னர் வெளிவந்திருக்கின்றன. எஸ்.எம். சுப்பையாநாயுடுவின் இசையில் கொஞ்சும் சலங்கையில் (1962) இடம்பெற்ற எஸ். ஜானகியின் (தெலுங்குப் பெண்மணி.) "சிங்காரவேலனே தேவா" *ஆபேரி* இராகத்தில் முற்றும்முழுதும் நனைந்தபாடல். அந்தப்பாடலுக்கான நாதஸ்வர இசையை வாசித்தவர் காரைக்குறிச்சி அருணாச்சலம். இவர், திருவிழாக் காலங்களில் யாழ்ப்பாணம் வந்து இசைத்ததாகவும் தெரியவருகிறது. அந்தக்காலங்களில் தமிழ்நாட்டுக் கலைஞர்கள் தொழில்நிமித்தம் யாழ்ப்பாணம் வருவதும், யாழ்ப்பாணக் கலைஞர்கள் அங்குசெல்வதுமான ஒரு கலைப்பரிமாற்றம் இருந்தது. இவரது குழலிசையையும், ஜானகியின் குரலிசையையும் தனித்தனியாகப்பதிவுசெய்து, track முறையில்லாத காலத்தில் ஒலிப்பதிவாளர் ஜீவா ஒருங்கிணைத்ததும் அந்தக்காலத்துச் சாதனை. நாதஸ்வரத்தின் சுருதியோடு பாடுவதற்கு, லதாமங்கேஷ்கரும் பி.லீலாவும் முதலில் மறுத்தனர்.பின்னர், மீண்டும் பி.லீலாவிடம் செல்ல, லீலா தானாகவே முன்வந்து, இது ஜானகிக்கே பொருத்தமானதென பெருந்தன்மையோடு சுட்ட, பாடல் ஜானகியிடம் சென்றதுதான் பாடலைக்குறித்த சங்கதி. லதாமங்கேஷ்கர், ஜானகி போன்றோர் உச்சசுருதியில் பாடும் வல்லமை பெற்றவர்கள் என்பதால் Soprano பாடகர்கள் என அழைக்கப்படுகிறார்கள். இப்பாடலுக்கு ஜானகிக்கு ஜனாதிபதி விருது கிடைத்ததும் குறிப்பிடத்தக்கது. இதில் இன்னொரு விடயத்தையும் பகிர்ந்துகொள்ளவேண்டும். Super singer Junior என்ற போட்டி நிகழ்ச்சியில், மலையாளச் சிறுமியான அல்கா என்பவள் இதே பாடலை, பல முதல்தர கலைஞர்கள்(ஜானகி உட்பட) முன்னிலையில் பாடி முதற்பரிசைத் தட்டிச்சென்றாள். அத்தருணம் ஜானகியே, என்னைவிட நீ நன்றாகப் பாடியுள்ளாய் என்று தன்னடக்கத்துடன் அவளைப்பாராட்டினார்.

1994இல் டூயட் என்ற படத்திற்காக ஏ.ஆர். ரகுமானின் இசையில் நித்தியஸ்ரீ மகாதேவன்(பட்டம்மாளின் பேர்த்தி) பாடிய வைரமுத்துவின் "கண்ணோடு காண்பதெல்லாம் தலைவா கண்களுக்குச் சொந்தமில்லை" என்ற பாடலும் சிங்காரவேலனேயின் உந்துதலாலேயே *ஆபேரியில்* பரிமளித்ததென்று சொன்னால் பொய்யாகாது.

**என்னவோ என் நெஞ்சில் இசைவந்து துளைத்தது…**
**இசைவந்த திசைபார்த்து மனங்குளிர்ந்தேன்.**

**-இசைப்பிரியன்-**

# சென்னை புத்தகக் கண்காட்சியில் 65 இலட்சம் புத்தகங்கள் விற்பனை!

தென்னந்திய புத்தக விற்பனையாளர் மற்றும் பதிப்பாளர் சங்கம் வருடா வருடம் ஜனவரி மாதம் சென்னையில் நடாத்தி வரும் புத்தகக் கண்காட்சியின் 35வது அரங்கு அண்மையில் நடந்து முடிந்துள்ளது. இம்முறை கண்காட்சியில் மொத்தம் 682 அரங்குகள்அமைக்கப்பட்டிருந்தன. மொத்தம் 65 இலட்சம் புத்தகங்களை மக்கள் வாங்கிச் சென்றனர்! இது கடந்த வருடத்தைக் காட்டிலும் 15 இலட்சம் கூடுதலாகும்.

கண்காட்சி அமைப்பாளர்கள் தந்த தகவலின்படி, கடந்த ஆண்டுகளில் சுயமுன்னேற்றம், ஆன்மீகம், சமையல் குறிப்புகள் போன்ற நூல்களே அதிகம் விற்பனை ஆகின. ஆனால் இம்முறை முற்போக்கு சிந்தனை, நவீன இலக்கியங்கள், கட்டுரைகள் என்பனவே வாசகர்களின் அதிக வரவேற்பைப் பெற்றுள்ளதாகத் தெரிய வருகிறது.

தமிழக மக்களின் இந்த அதிகரித்துச் செல்லும் வாசிப்புக் கலாச்சாரத்துடன் ஒப்பிடுகையில், தனிநாடு அமைக்கப் போராடிய ஈழத்தமிழனின் இன்றைய பாலைவன வாழ்க்கையை விளங்கிக் கொள்ள முடியும். அங்கு எப்பொழுது தமிழீழப் போராட்டம் தொடங்கியதோ, அன்றே சுதந்திர எழுத்தாளர்களின் பேனாக்கள் ஓய்ந்துவிட்டன. புத்தக வெளியீடுகள் அருகிவிட்டன. வாசிப்பு பழக்கம் தொலைந்து போய்விட்டது. இப்பொழுது தென்னிந்திய குப்பை சினிமாக்களும் நாடகங்களுமே இலங்கைத் தமிழனின் (புலம்பெயர் தமிழர்கள் உட்பட) 'அறிவை வளர்க்கும்' கருவிகளாகிவிட்டன.

இந்த துர்ப்பாக்கிய நிலையை மாற்றியமைத்து, மீண்டும் ஈழத்து இலக்கியப் பரப்பில் ஒரு வசந்தத்தை உருவாக்குவது, தாயகத்தை நேசிக்கும் ஒவ்வொரு செந்தமிழனினதும் தலையாய கடமையாகும்.

# மக்கள் விரும்புவதைக் கொடுப்பதா ஊடக தர்மம்?



## மார்க்கண்டே காட்யூ
**(முன்னாள் நீதிபதி - இந்திய பத்திரிகைப் பேரவையின் தற்போதைய தலைவர்)**

*பல்வேறு துறைகளில் கருத்துருவாக்கத்தை வளர்ப்பதில் சமுதாயத்துக்கு தலைமை தாங்க வேண்டிய பொறுப்பு ஊடகங்களுக்கு இருக்கிறது.*

*ஊடகத்துறையிலுள்ளவர்கள் உயர்ந்த அறிவுத்திறன் மட்டத்தைக் கொண்டிருக்காவிட்டால், எவ்வாறு பல்வேறு துறைகளில் கருத்துருவாக்கத்தை வளர்ப்பதில் மக்களுக்குத் தலைமைதாங்கி வழிகாட்ட முடியும்? சமூக விஞ்ஞானம், சரித்திரம் மற்றும் இலக்கியம் போன்ற துறைகளை ஊடகவியலாளர்கள் மிகவும் ஊன்றிக் கற்க வேண்டும்.*

*கேளிக்கை நிகழ்ச்சிகளுக்கு 90 சதவீத முக்கியத்துவத்தையும், சமூக பொருளாதாரத் தன்மை வாய்ந்த மெய்யான பிரச்சினைகளுக்கு 10 சதவீத முக்கியத்துவத்தையும் ஊடகங்கள் கொடுப்பது நியாயப்படுத்த முடியாத செயலாகும். கேளிக்கைகளுக்கும் பொழுதுபோக்கு அம்சங்களுக்கும் ஓரளவு முக்கியத்துவம் வழங்கத்தான் வேண்டும். ஆனால் ஊடகங்களின் முனைப்பான கவனம் பொதுமக்களின் நலன்களில் குவிந்திருக்க வேண்டும். முன்னுரிமை கொடுக்க வேண்டிய விவகாரங்கள் எவை என்பதை மதிப்பிடுவதில் ஊடகவியலாளர்கள் பெரும் தவறிழைத்துக் கொண்டிருக்கிறார்கள்.*

*ஊடகத்துறை ஒரு வணிகமாகவும் இருப்பதால், மக்கள் விரும்புவதைக் கொடுக்க வேண்டும் என்ற வாதம் ஊடகங்களைத் தரம் தாழ்த்துவதாக அமைகிறது. ஊடகத்துறை பண்டங்களுடனும், சரக்குகளுடனும் சம்பந்தப்பட்ட ஒரு சாதாரண வணிக நடவடிக்கை அல்ல. அது கருத்துக்களுடன் சம்பந்தப்பட்டது.*

*எமது மக்களில் பெரும்பான்மையானவர்களின் அறிவுத்திறன் மட்டம் மிகவும் தாழ்ந்ததாக இருக்கிறது. ஊடகங்களும் அந்த மட்டத்துக்குத் தாழ்ந்து சென்று, அக்களின் அறிவுத்திறனை அந்த கவலைக்குரிய மட்டத்திலேயே தொடரவிடப் போகின்றனவா அல்லது மக்களின் அறிவுத் திறனை மேம்படுத்துவதில் நாட்டம் காட்டப் போகின்றனவா?*

*இணையத்திலும் பேஸ் புக், ருவிட்டர் போன்ற சமூக இணையத்தளங்களிலும் வெளிப்படுத்தப்படுகின்ற கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டு நோக்குகையில், ஊடகங்கள் தொடர்பான எனது கருத்துக்களை 90 சதவீதமான மக்கள் ஆதரிக்கிறார்கள் என்பதைப் புரிந்து கொள்ளக் கூடியதாக இருக்கிறது. நிலப்பிரபுத்துவ விவசாய சமூகம் என்ற நிலையில் இருந்து, நவீன கைத்தொழில் மய சமுதாயம் என்ற நிலையில் ஒரு மாறுதல் காலகட்டத்தில் நாம் இருக்கிறோம். இக்காலகட்டம் உண்மையில் வேதனை தருவதாகவே இருக்கும் என்பதில் சந்தேகம் இல்லை.*

*இந்த மாறுதல் காலகட்டத்தில் கருத்துருவாக்கம் முக்கியமானதாகிறது. பகுத்தறிவுக் கருத்துக்களை, விஞ்ஞானரீதியிலான கருத்துக்களை மேம்படுத்த வேண்டும். இந்த மாறுதல் காலகட்டத்தின் ஊடாக சமுதாயம் விரைவாகவும் குறைந்தளவு வேதனையுடனும் நகர்ந்து செல்வதற்கு உதவியாக இருக்க வேண்டும். ஊடகங்களில் பெரும்பாலான பிரிவுகள் சோதிடம் போன்ற பிற்போக்கான கருத்துக்களையே மேம்படுத்திக் கொண்டிருக்கின்றன.*

*17ம் நூற்றாண்டில் இருந்து 19ம் நூற்றாண்டு வரை ஐரோப்பா அதன் வரலாற்றில் பெரும் முக்கியத்துவம் வாய்ந்த மாறுதல் காலகட்டத்தினூடாகச் சென்றது. அந்தக் காலகட்டத்தில் வோல்ரயர், ரூசோ, தோமஸ், பெயின் மற்றும் ஜூனியஸ் போன்ற மகத்தான எழுத்தாளர்கள் பயனுறுதியுடைய முற்போக்கான பங்களிப்புகளைச் செய்வதில் தங்களை அர்ப்பணித்ததை வரலாற்றில் கண்டிருக்கிறோம்.*

*ஊடகங்களின் பெரும் பகுதி மெய்யான பிரச்சினைகளிலிருந்து மக்களின் கவனத்தைத் திசைதிருப்பி, பல் வகைமை கொண்ட நாட்டில் சமுதாயத்தில் பிளவுகளை ஏற்படுத்தி, மூட நம்பிக்கைகளை மேம்படுத்துவதன் மூலமாக மக்கள் விரோதத்தன்மை கொண்டவையாகவே விளங்குகின்றன. ஊடகங்கள் தங்களைத் திருத்திக் கொள்ள வேண்டும்.* *

## *சீனாவில் 10 ஆண்டுகளில் 20 ஆயிரம் நகரங்களும் 360 மாநகரங்களும் உருவாகியுள்ளன!*

சீனாவில் 2000ஆவது ஆண்டில் இருந்து 2010ஆம் ஆண்டுவரை ஏற்பட்டுள்ள நகர்ப்புறங்களின் வளர்ச்சி உலகத்தில் வேறெங்கும் காண முடியாதது. மேற்குறிப்பிட்ட 10 ஆண்டுகளில் மட்டும் 20 கோடி பேர் கிராமங்களிலிருந்து நகரங்களுக்குக் குடி பெயர்ந்துள்ளனர். தற்போது சீனாவின் மொத்த மக்கள் தொகையில் 50 சத விகிதம் பேர் நகரங்களில் வசிக்கிறார்கள்.

இந்த குறுகிய காலகட்டத்தில் பேரூராட்சிகளாகவும், ஊராட்சிகளாகவும் இருந்த பல பகுதிகள் நகரங்கள் எனும் அந்தஸ்துக்கு மாற்றி அமைக்கப்பட்டு, பல வசதிகளை அடைந்துள்ளன. அந்த வகையில் 20 ஆயிரம் புதிய நகரங்களும், 360 மாநகரங்களும் அங்கு உருவாகியுள்ளன.

முக்கிய நகரங்கள் என்று எடுத்துக் கொண்டால் தலைநகர் பெய்ஜிங்கில் 2 கோடி பேர் வசிக்கிறார்கள். சீனாவின் பொருளாதார நகரமான சாங்காயில் 2 கோடியே 30 லட்சம் பேர் வசிக்கிறார்கள். சாங்காய் கண்டுள்ள வளர்ச்சியை அதிசயம் எனக் கூறலாம்.

அமெரிக்காவின் நியூயார்க் மாநகரம் இவ்வளவு பெரிய நகரமாக உருவெடுக்க 100 ஆண்டுகள் ஆகியது. ஆனால் சாங்காய் நகரம் 15 ஆண்டுகளுக்குள் நியூயார்க் போல 2 மடங்கு வளர்ச்சியைக் கண்டுள்ளது. Sky Scrapers என்று கூறப்படும் வானாளாவிய உயரமான கட்டிடங்கள் மட்டும் சாங்காய் நகரில் 4 ஆயிரம் உள்ளன.

-இது சீனாவுக்கு அடிக்கடி சென்று வரும் இந்திய நிபுணர்களில் ஒருவரான ஜி.விஸ்வநாதன் 'துக்ளக்' சஞ்சிகையில் தொடராக எழுதிவரும், 'சீனாவின் வளர்ச்சி - ஒரு பார்வை' என்ற கட்டுரையின் ஒரு பகுதியாகும். *

## வடக்கு கிழக்கில் காணிப்பதிவு நடவடிக்கையை அரசாங்கம் வாபஸ் வாங்கியது!

வடக்கு கிழக்கு மாகாணங்களில் வாழ்கின்ற மக்கள் தமது காணிகளை 2011 நவம்பர் 20ம் திகதிக்கு முன்னர் பதிவு செய்ய வேண்டுமென விடுத்த உத்தரவை வாபஸ் வாங்குவதாக அரசாங்கம் தற்போது அறிவித்துள்ளது.

இந்தக் காணிப் பதிவு நடவடிக்கையை இரத்துச் செய்யுமாறு கோரி தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் மேன்முறையீட்டு நீதிமன்றில் மனுவொன்றை தாக்கல் செய்திருந்தார். அந்த மனு மீதான விசாரணையின் போதே, காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சினால் முன்னர் விடுக்கப்பட்டிருந்த இந்த சுற்று நிருபத்தை வாபஸ் பெறுவதாக சட்டமா அதிபரின் பிரதி சொலிசிட்டர் ஜெனரல் முருது பெர்ணாண்டோ அறிவித்தார்.

இந்தக் காணிப் பதிவு நடவடிக்கை, வடக்கு கிழக்கில் வாழும் மக்களையும், அந்தப் பகுதிகளில் காணிகளை வைத்திருக்கும் புலம்பெயர் மக்களையும் கலவரத்திலும் பீதியிலும் ஆழ்த்தியிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

## சட்டிக்குள் இருந்தது அகப்பையில் வந்தது!

'பக்கத்து வீட்டுக்காரனை நம்ப முடியாது. பழைய கோபம், அம்மாவுக்குப் பிடிக்கவில்லை, அது இது என்று சொல்லி எமக்கு எதிராகவே எப்போதும் இருப்பான். ஆனால் அமெரிக்காகாரனுக்கு எம்மீது கோபங்களோ, வெறுப்போ கிடையாது. அவனுக்கு அவனுடைய நலன்கள் தான் முக்கியம். அந்த நலன்களைப் பாதுகாக்க நாம் உதவியாக இருந்தால் அவனுக்குச் சரி. அவனோடு நாம் ஒட்டுவதற்கு வாய்ப்புகள் உள்ளன. அவனோடு ஒட்டுவதே எமக்கும் நல்லது.'

அமெரிக்காவின் ஜனாதிபதியாக பராக் ஒபாமா பதவியேற்பதற்கு சில தினங்கள் முன்னதாக, 'நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் பிரதமர்'வி.உருத்திரகுமாரனின் உதவியாளர் வழுதி என்பவர், வன்னியிலிருந்த புலிகளின் அரசியல் பொறுப்பாளர் பா.நடேசனுக்கு எழுதிய ஒரு கடிதத்தின் பகுதி. இங்கு 'பக்கத்து வீட்டுக்காரன்' எனக் குறிப்பிடுவது இந்தியாவைத்தான் என்பது சொல்லாமலே விளங்கும். *

**வாசகர் கேள்வியும் பதிலும்**

# புலிகள் அழிக்கப்பட்ட பின்னரும் புலிகளுக்கு எதிராகத் தொடர்ந்து பிரச்சாரம் செய்வது அவசியம்தானா?

*கேள்வி: புலிகள் அழிக்கப்பட்டு 3 வருடங்களுக்கு மேலாகிவிட்டது. இப்பொழுது இலங்கையில் அவர்களின் தாக்குதல்கள் எதுவுமில்லை. அப்படியிருக்க அரசாங்கமும் சில ஊடகங்களும் (வானவில் உட்பட) புலிகளுக்கு எதிராகத் தொடர்ந்து பிரச்சாரம் மேற்கொண்டு வருகின்றன. இது அவசியம்தானா?*

**சு.தர்மானந்தன், மார்க்கம், கனடா**

*பதில்: புலிகள் இராணுவ ரீதியாக இலங்கையில் தோற்கடிக்கப்பட்டிருப்பது உண்மைதான். ஆனால் அவர்கள் பெரும் பண பலத்துடனும் வலிமை வாய்ந்த சில வெளிநாட்டு சக்திகளின் பின்பலத்துடனும் புலம்பெயர் நாடுகளில் செயல்பட்டு வருகின்றனர். உள்நாட்டிலும் தமிழ் தேசியக் கூட்டமைப்பு அந்தப் பணியைத்தான் முன்னெடுத்து வருகிறது. இது பருண்மையான கள நிலவரம். ஆனால் இதற்கும் அப்பால் மிகவும் கூர்ந்து கவனிக்க வேண்டிய, மறைந்து கிடக்கின்ற பல முக்கியமான விடயங்கள் புலிகள் விடயத்தில் இருக்கின்றது. அதுதான் இந்தப் பிரச்சினையின் ஆணிவேர்.*

*புலிகள் இயக்கம் என்பது தமிழர் வாழ்வில் திடீரெனத் தோன்றிய ஒரு அமைப்பு அல்ல. அந்த இயக்கத்தில் பிரபாகரன் என்ற தனி மனிதன் செலுத்திய ஆளுமைமிக்க வெளிப்படையான தலைமைத்துவத்தை வைத்துக்கொண்டு, அந்த இயக்கம் முழுக்க முழுக்க ஒரு தனிமனிதன் சம்பந்தப்பட்டது என்ற பார்வை பலரிடம் உள்ளது. உண்மை அதுவல்ல.*

*புலிகள் இயக்கம் என்பது தமிழ் மேட்டுக்குடி பிற்போக்கு வர்க்கத்தின் ஒரு ஆயுதம் தாங்கிய அணியே தவிர வேறொன்றுமல்ல. அது முதலில் சேர்.பொன்.இராமநாதன் போன்றவர்களால் பிரதிநிதித்துவப்படுத்தப்பட்டு, பின்னர் ஜீ.ஜீ.பொன்னம்பலத்தின் தமிழ் காங்கிரஸ், எஸ்.ஜே.வி.செல்வநாயகத்தின் தமிழரசுக்கட்சி என்பனவற்றால் பிரதிநிதித்துவப்படுத்தப்பட்டு வந்தது. ஆரம்பத்தில் பிரித்தானிய காலனித்துவம் விட்டுச்சென்ற வெஸ்ற்மினிஸ்ரர் முதலாளித்துவ ஜனநாயக பாரம்பரியத்தைப் பின்பற்றி இரு கட்சி ஜனநாயக முறையில் தமிழ் காங்கிரசும் தமிழரசுக்கட்சியும் எதிர் எதிர் அணிகளாகச் செயற்பட்ட போதும், 1970களில் தமிழ் ஆளும் வர்க்கம் மக்கள் செல்வாக்கை இழந்து ஆபத்து ஏற்பட்ட போது, அந்த இரு கட்சிகளும் 'தமிழர்களின் நலன்களைக் காக்க' என்ற போர்வையில் தமது நீண்டகாலப் பகைமையை மறந்து ஒரே அணியாகச் சேர்ந்து, தமிழர் விடுதலைக் கூட்டணி என்ற அமைப்பை உருவாக்கிக் கொண்டன.*

*அந்த தமிழர் விடுதலைக் கூட்டணியே தமிழ் பிற்போக்கு ஆளும் வர்க்கத்தின் அபிலாசையான தனித் தமிழ் நாடு என்னும் கோரிக்கையை முன்வைத்தது. அதேநேரத்தில் இனரீதியாக முரண்பாடு இருந்தபோதிலும் தமது பழைய தென்னிலங்கை வர்க்க சகாவும், ஏகாதிபத்தியத்தின் மிக நம்பிக்கையான விசுவாசியுமான ஐக்கிய தேசியக் கட்சியுடனும் கூடிக்குலாவி வந்தது. ஏகாதிபத்திய எதிர்ப்புச் சக்தியான சிறீலங்கா சுதந்திரக் கட்சி தலைமையிலான கூட்டரசாங்கங்கள் பதவிக்கு வரும் நேரங்களில் தமிழ் பிற்போக்குத் தலைமை அரச எதிர்ப்புப் போராட்டங்களை நடாத்துவதிலிருந்தும், ஐ.தே.க ஆட்சிபீடம் ஏறும் நேரங்களில் அவர்களுடன் கூடிக்குலாவுவதிலிருந்தும் இந்த உண்மையை இலங்கை வரலாற்றில் அடிக்கடி காணலாம்.*

*70களில் தமிழ் காங்கிரஸ், தமிழரசுக் கட்சிகள் மீது தமிழ் மக்கள் நம்பிக்கை இழந்தது போல, 80களில் அவர்கள் இரு பகுதியினரும் சேர்ந்து உருவாக்கிய தமிழர் விடுதலைக் கூட்டணி மீதும் மக்கள் நம்பிக்கை இழக்கத் தொடங்கினர். ஆனாலும் தமிழர் விடுதலைக் கூட்டணி உருவாக்கிய தமிழீழ தீர்மானமும், அது தொடக்கி வைத்த வன்முறை நடவடிக்கைகளும், அதற்காக அவர்கள் திரட்டி வைத்திருந்த இளைஞர் குழாமும் அப்படியே இருந்தன. எனவே பழைய தமிழர் கூட்டணித் தலைமையை நிராகரித்த தமிழ் இளைஞர்கள் தமிழீழக் கோரிக்கையையும், வன்முறை அரசியலையும் தமது கைகளில் எடுத்துக்கொண்டு பல்வேறு இயக்கங்களை உருவாக்கி ஆயுதம் தாங்கிப் போராடத் தொடங்கினர்.*

*பொதுவாக உலகில் எல்லாவிதமான விடுதலைப் போராட்டங்களும், ஏகாதிபத்திய எதிர்ப்பையும் முற்போக்கு அரசியலையும் அடிப்படையாகக் கொண்டு வழி நடாத்தப்பட்டவையே என்ற அடிப்படையில், இலங்கைத் தமிழ் இளைஞர்களின் பெரும்பாலான ஆயுதப்போராட்ட*

*இயக்கங்களும் கூட அந்த வழிமுறையையே பின்பற்ற முயற்சித்தன. அதற்கொரு பிரதான காரணம், அன்றைய காலகட்டத்தில் இலங்கையில் ஏகாதிபத்திய சார்பான, படு பிற்போக்கான ஜே.ஆர்.ஜெயவர்த்தனவின் ஐ.தே.க ஆட்சியில் இருந்தமையும், அது தேசிய இனப்பிரச்சினையை அரசியல் ரீதியாகத் தீர்க்காமல், அதை இராணுவ ரீதியாகத் தீர்க்க முயன்றதுமாகும்.*

*இத்தகைய ஒரு சூழலில், இலங்கைத் தமிழர்களின் தேசிய தற்பாதுகாப்புக்கான போராட்டம் முற்போக்கு புரட்சிகர சக்திகளின் சுயாதீனமான தலைமையை உருவாக்கும் சூழலும் உருவாகி வந்தது. இதைக்கண்டு முதலில் அஞ்சிய, இலங்கையின் அயல்நாடான இந்தியாவின் பெரும் முதலாளித்துவ ஆளும் வர்க்கம், அவ்வாறு ஏற்படுவதைத் தடுப்பதற்காக தனக்கு விசுவாசமான இயக்கங்களை தமிழர்கள் மத்தியில் உருவாக்கத் தொடங்கியது. மறுபக்கத்தில் இந்தியாவின் நெருங்கிய நட்பு சக்தியான சோவியத் வல்லரசுடன் உலகளாவிய ஆதிக்கப் போட்டியில் ஈடுபட்டிருந்த மேற்கத்தைய ஏகாதிபத்தியம் தனக்கு விசுவாசமான அணியை தமிழ் இயக்கங்கள் மத்தியில் உருவாக்க எத்தனித்தது. இதன் விளைவாகவே இந்திய சார்பு இயக்கங்களும் அதற்கெதிராக மேற்கத்தைய சார்பு புலிகளும் தோற்றம் பெற்றார்கள். இதன் அடிப்படையிலேயே சில அமைப்புகளுக்கு இந்தியாவின் நட்பைப் பெற்றிருந்த பாலஸ்தீன விடுதலை இயக்கம் இராணுவப் பயிற்சி அளிக்க, ஏகாதிபத்திய விசுவான நாடான இஸ்ரேலின் மொசாட் உளவு அமைப்பு புலிகளுக்கு இராணுவப் பயிற்சி அளித்தது.*

*ஆனால் இறுதியில் இந்தப் போட்டா போட்டியில் புலிகள் இயக்கமே வெற்றி பெற்றது. அது சுலபமாக இந்திய சார்பு இயக்கங்களையும், சுயாதீனமான முற்போக்கு புரட்சிகர இயக்கங்களையும் அழித்தொழித்தது. அதன் இந்த நடவடிக்கைகளுக்கு மேற்கிலிருந்து சென்ற பெருந்தொகை பணமும் ஆயுதங்களும் அரசியல் ஆதரவும் பக்க பலமாக அமைந்தன. அது மாத்திரமின்றி பாரம்பரிய பிற்போக்குத் தமிழ் தலைமையும் புலிகளையே ஆதரித்தது. ஐ.தே.கவின் மறைமுக ஆதரவும் (பிரேமதாச அரசு வெளிப்படையாகக்கூட) புலிகளுக்கே இருந்தது.*

*புலிகள் இந்த ஆதரவுகளைப் பயன்படுத்தி மாற்று இயக்கங்களை மட்டுமின்றி, ஜனநாயக அரசியல் கட்சிகள், இடதுசாரிக் கட்சிகள், தொழிற்சங்கங்கள், மனித உரிமை அமைப்புகள், புத்திஜீவிகள் என எல்லாவிதமான தமிழ் ஜனநாயக சக்திகளையும் அழித்தொழித்து, வடக்கு கிழக்கில் தமிழ் பிற்போக்கு சக்திகளின் ஒரு பாசிச ஆட்சியதிகாரத்தை நிறுவினர். உள்நாட்டில் மட்டுமின்றி இந்தியா உட்பட இந்தப் பிராந்தியத்திலுள்ள அனைத்து நாடுகளுக்கும் அபாயகரமான சக்திகளாகவும் உருவெடுத்தனர். அரபுக்கள் மத்தியில் எப்படி ஏகாதிபத்தியம் சியோனிச இஸ்ரேலை உருவாக்கியதோ, அதேபோன்று புலிகளை தென்னாசியப் பிராந்திய இஸ்ரேலாக உருவாக்கி வந்தது.*

*1994ல் சந்திகா பண்டாரநாயக்க குமாரதுங்க தலைமையிலான ஏகாதிபத்திய எதிர்ப்பு அரசாங்கம் அமைந்ததும், ஏகாதிபத்தியம் புலிகளுக்கு மேலும் புதிய இரத்தத்தைப் பாய்ச்சியது. நோர்வே மூலம் இது சமாதான முயற்சிகள் என்ற போர்வையில் வெகுசாதுரியமாகச் செய்யப்பட்டது. அதன் மூலம் புலிகள் இயக்கம் இலங்கையின் தேசிய சுதந்திரம், பிரதேச ஒருமைப்பாடு என்பனவற்றுக்கும், தமிழ் மக்களின் ஜனநாயக வாழ்வுக்கும் சவால் விடுக்கும் பாரிய சக்தியாக உருவெடுத்தனர். மேற்கத்தைய முதலாளித்துவ நாடுகள் தமது நாடுகளில் புலிகள் இயக்கம் பயங்கரவாதச் செயல்பாடுகளில் ஈடுபடுவதைத் தடுக்குமுகமாக அதைத் தடை செய்தனவே தவிர, அது இலங்கையில் மேற்கொண்ட பயங்கரவாத மற்றும் மனித குலத்துக்கு எதிரான செயற்பாடுகளைத் தடுக்க பெரிய முயற்சிகள் எதனையும் எடுக்கவில்லை.*

*இந்தச் சூழ்நிலையில்தான், மகிந்த ராஜபக்ச அரசு ஆட்சிக்கு வந்ததும் புலிகள் இயக்கத்தைச் சரியான முறையில் கையாண்டு, அவர்களை முற்றுமுழுதாக இலங்கை மண்ணிலிருந்து அழித்தொழித்தது. இந்த நடவடிக்கையானது இலங்கையின் அனைத்து இன மக்களுக்கும் கிடைத்த மாபெரும் வெற்றியாகும். அதேநேரத்தில் இந்த வெற்றிகரமான நடவடிக்கையானது ஏகாதிபத்தியத்தின் தென்னாசியா சம்பந்தமான திட்டங்களைக் கணிசமான அளவில் உடைத்தெறிந்தது. எனவே தான், இன்று மேற்குலக சக்திகள் இலங்கை மீது பலவிதமான குற்றச்சாட்டுகளை முன்வைத்து, தற்போதைய அரசை வீழ்த்த முயற்சிப்பதோடு, இலங்கையின் ஸ்திரத்தன்மையையும் சீர்குலைக்க முயல்கின்றன.*

*மறுபக்கத்தில், புலிகள் இயக்கம் இலங்கையில் இராணுவ ரீதியாக அழிக்கப்பட்டிருப்பினும், அதைப் பெற்றெடுத்த தமிழ் பிற்போக்கு*

*சக்திகள் தமிழ் தேசியக் கூட்டமைப்பு என்ற பெயரில் இன்னமும் வலுவாகச் செயற்படுவதுடன், இன்னொரு புலி இயக்கத்தை உருவாக்கும் வேலைகளிலும் ஈடுபட்டு வருகின்றனர். அதுமாத்திரமின்றி, இலங்கையில் புலிகள் என்ற ஆலமரம் வீழ்த்தப்பட்டாலும், புலம்பெயர் நாடுகளில் அந்த மரத்தின் விழுதுகள் நாட்டப்பட்டு நிரூற்றி வளர்க்கப்படுகின்றன. உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் செய்யப்படும் இந்த எதிர்ப்புரட்சிகர செயல்களுக்கு, சர்வதேச ஏகாதிபத்திய சக்திகள் துணை நிற்கின்றன.*

*எனவே புலிகளின் அழிவு என்பது தமிழ் பிற்போக்கு சக்திகளின் ஒரு பட்டாலியனின் - படைப்பிரிவின் - அழிவு மட்டுமே. அதன் தாய்ப்படை தமிழ் தேசியக் கூட்டமைப்பு என்ற பெயரிலும், புலிகளின் எச்சசொச்சங்கள் புலம்பெயர் புலிகளாகவும் இன்னமும் வலுவுடன் செயற்படுகின்றனர். புலிகள் இயக்கம் என்பது தமிழ் பிற்போக்கு பாசிச சக்திகளின் ஒரு வெளிப்பாடு மட்டுமே. எனவே அதைப் பெற்றெடுத்த அந்தப் பிற்போக்கு சக்திகள் இருக்கும்வரை அந்தப் பாசிச அபாயமும் இருந்துகொண்டே இருக்கும்.*

*எனவே தமிழ் பிற்போக்கு சக்திகள் முற்றுமுழுதாக அழிக்கப்பட்டு, தமிழ் மண்ணிலும் இலங்கையிலும் ஒரு நிலையான மக்கள் ஜனநாயக அரசியல் அதிகாரம் நிலைநாட்டப்படும் வரை, புலிகளுக்கும், தமிழ் பிற்போக்கு சக்திகளுக்கும், சகலவிதமான ஏகாதிபத்திய அடிவருடிகளுக்கும் எதிரான பிரச்சார வழியிலான அரசியல் போர் தவிர்க்க முடியாதது. எப்படி சர்வாதிகாரி ஹிட்லர் அழிக்கப்பட்டும்கூட, மேற்குலகில் இன்னமும் நாஜியக் கருத்துக்களும் பாசிச சிந்தனைகளும், அதற்கெதிரான பிரச்சாரங்களும் நிலவுகின்றதோ, அது போன்றதே புலியிசமும் அதற்கெதிரான போரும்.*

*எனவே புலிகளுக்கெதிரான பிரச்சாரத்தை தமிழ்மக்கள் மத்தியில் தொடர்ந்து நடாத்துவது என்பது ஒரு வரலாற்றுத் தேவையாகும்.* *

# லிபியாவின் புதிய ஆட்சியின் கீழ் தலைவிரித்தாடும் சித்திரவதைகளும் கொலைகளும்!

எண்ணெய் வளம் மிக்க லிபியாவில், மேற்கத்தைய ஏகாதிபத்திய சக்திகளின் உதவியுடன் கேணல் கடாபியின் 42 வருட ‘சர்வாதிகார’ ஆட்சி கிளர்ச்சியாளர்களால் தூக்கி வீசப்பட்டு, அங்கு மனித உரிமைகளை மதிக்கும் ஜனநாயக ஆட்சி உருவாகியுள்ளதாக முதலாளித்துவ ஊடகங்கள் பெரும் எடுப்பிலான பிரச்சாரங்களைச் செய்து வந்த போதிலும், அங்கு முன்னரைக் காட்டிலும் மனித உரிமை நிலவரங்கள் மிகவும் மோசமடைந்திருப்பதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

அங்குள்ள நிலைமைகள் பற்றி அண்மையில் கருத்து வெளியிட்ட சர்வதேச மன்னிப்புச் சபையின் முன்னாள் தலைவரும், லிபியாவுக்கான தற்போதைய ஐ.நா தூதருமான இயன் மார்ட்டின், அங்கு கிளர்ச்சிக் குழுக்களுக்கிடையில் மோதல்கள் தொடர்வதாகவும் மக்களின் வாழ்வில் இயல்பு நிலை திரும்பவில்லை என்றும் சுட்டிக்காட்டியிருக்கிறார்.

அதேபோல ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை வெளியிட்டுள்ள ஓர் அறிக்கையில், தமக்குக் கிடைத்துள்ள தகவல்களின்படி, லிபியாவின் இடைக்கால ஆட்சியாளர்களும் பல்வேறு கிளர்ச்சிக் குழுக்களும் கடாபி ஆதரவாளர்கள் என்று சந்தேகப்படுவோரைக் கைதுசெய்து மிகவும் திட்டமிட்ட மோசமான முறையில் சித்திரவதை செய்து வருவதாகவும், பலர் கொலை செய்யப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

இந்த மாதிரியான தகவல்களை சர்தேச மன்னிப்புச் சபையும், எல்லைகளற்ற டாக்டர்கள் அமைப்பும்கூட வெளியிட்டுள்ளன.

வேறு சில செய்தி நிறுவனங்கள் அளித்த தகவல்களின்படி, கடாபிக்கு ஆதரவான பல குடும்பங்கள் முற்றாகக் கொலை செய்யப்பட்டுள்ளதாகவும், பல இளம் பெண்கள் பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளதாகவும், அங்கு சட்டம் ஒழுங்கைப் பேணுவதில் புதிய லிபிய அரசாங்கம் அக்கறையும் திறமையும் அற்று இருப்பதாகவும் குறிப்பிட்டுள்ளன. நாட்டின் பல்வேறு பகுதிகளை வெவ்வேறான கிளர்ச்சிக் குழுக்கள் தமது கட்டுப்பாட்டில் வைத்திருப்பதாகவும் தெரிய வந்துள்ளது.

லிபியாவில் தற்போது உருவாகியுள்ள நிலைமைகள் குறித்து, அங்கு ஆட்சி மாற்றத்துக்குத் துணைபுரிந்த நாடுகளில் ஒன்றான கனடா தனது அதிருப்தியையும் கண்டனத்தையும் தலைநகர் ஒட்டாவாவிலுள்ள லிபிய தூதரக அதிகாரிகளிடம், திரிப்பொலியில் உள்ள லிபிய அதிகாரிகளிடமும் தெரிவித்துள்ளது.

*

‘வானவில்’ நோக்கி வந்த மடல்!

# யாழ். பல்கலைக்கழக முன்னாள் ஆசானின் பார்வையில் கனடிய ஊடகங்கள்

வானவில் ஆசிரியர் குழுவினருக்கு!

வணக்கம். வாழ்த்துக்கள்.

ஓராண்டு சாதனை படைத்து இரண்டாம் ஆண்டில் காலடி பதிக்கும் வானவில்லின் கதிர் வீச்சுக்கள் நிச்சயம் உலகப் பந்தில் தமிழர் வாழுமிடமெல்லாம் அறிவொளி பரப்பி, தமிழர் சிந்தனைகளுக்குப் புத்துயிரளிக்கும் என்பதை உங்கள் மாதாந்த இதழ்களின் வழி அறிந்து கொள்கிறேன். நீதிவழி தவறாது ‘சத்தியம் வசி’ – என்பதற்கேற்ப நடுநிலை உண்மைகளை மக்கள் மத்தியில் பரப்புங்கள். சத்தியம் ஜெயிக்கும். போலிகள் முகவரி அற்றுப் போய்விடும். அதுதான் உலக வரலாற்று உண்மை!

புலம்பெயர் சூழலில் குறிப்பாகக் கனடாவில் தமிழில் இயங்கும் பெரும்பாலான ஊடகங்களும் தமிழ்மொழியையும் தமிழினத்தையும் வைத்துப் பணம் திரட்டும் பெரும்பணியிலேயே பயணிக்கின்றன. சமூகத்திற்கு நல்லன செய்யாமை, நல்லனவற்றை அறிவிக்கப் பின்னிற்றல், பிழையான செயற்பாடுகளை இடித்துரைக்கும் திராணியற்ற நிலை, சுயவிளம்பரங்கள், ஊடகம் என்பது சமூகத்திற்குப் பொதுவானது என்ற கோட்பாட்டை மறந்து குடும்பம் – நண்பர் என்ற குழாத்துக்கு மட்டுமே சொந்தம் என்ற நிலைப்பாடு, பணம் கொடுத்தால்தான் சமூக நிகழ்வுகள் அறிவிக்கப்படும் என்ற அவலநிலை எனப் பல்வேறு அணிகலன்களுடனேயே ஊடகங்கள் எம்மிடையே செயற்படுகின்றன என்பதை எந்த ஒரு சாதாரண வாசகனும் சமூகச் செயற்பாட்டாளனும் அறிந்து கொள்வான்.

எத்தனையோ நல்ல விடயங்கள் சமூகத்தில் ஒரு சிலரது அர்ப்பணிப்புகளுடன் நடைபெறுகின்றன. அவற்றை எவ்வாறு இருட்டடிப்புச் செய்யலாம் என்பதில் சில ஊடகங்கள் மிக அக்கறையாக உள்ளன. தொலைக்காட்சி – வானொலி – பத்திரிகை என்ற முக்கிய ஊடகங்கள் கனடாவின் அரசியல் யாப்புக்கூறும் புனிதமான பத்திரிகைச் சுதந்திரத்தைப் பயன்படுத்துகின்றனவா என்பது கேள்விக்குறியே. வானவில் கூறுவது போன்று இவர்களுக்கு “தமிழ் இனவாத முதலாளித்துவ சக்திகளினதும் ஏகாதிபத்திய சக்திகளினதும் நலன்களே முக்கியமாக இருக்கின்றன”.

பொருள் வளமும் மனித வளமுமுள்ள கனடாவில் ஊடகங்கள் சாதனை படைக்கக் கூடிய எத்தனையோ வாய்ப்புக்கள் உள்ளன. அவற்றை அவை பயன்படுத்திக் கொள்ள வேண்டியது காலத்தின் தேவையாகின்றது. குழு அடிப்படையில் குறுகிய வட்டத்துள் சுழன்றால் வெளியிலுள்ளவர்களின் பல்வகைத் திறன்கள் அனுபவங்கள் கனடியப் பெருவெளியில் காற்றோடும் பனியோடும் சங்கமமாகிவிடும். ஆனால் ஊடகங்கள் இப்பணியில் தவறிழைத்தால் வரலாறு அவர்களை மறக்காது.

வானவில் சமூக சிந்தனையோடும் இனம் – மொழி அக்கறையோடும் புதுவழியில் பயணிக்கத் தொடங்கியிருக்கிறது. தமிழினத்தின் புத்திஜீவிகள் புத்துணர்ச்சி பெறும் வகையில், பக்கச் சார்பற்ற நிலையில், ஆக்கபூர்வமான சிந்தனை – செயற்பாடு என்பவற்றுடன் இயங்கினால் நிச்சயம் வெற்றிக்கொடி நாட்டலாம். முயற்சி திருவனையாக்கும். வாழ்த்துக்கள்.

**கலாநிதி இ.பாலசுந்தரம் – கனடா**

**(கலாநிதி இ.பாலசுந்தரம் அவர்கள் யாழ்.பல்கலைக்கழகத்தில் சிரேஸ்ட விரிவுரையாளராக பணி புரிந்தவர். சமூக அக்கறையுள்ளவர். இப்பொழுது கனடாவில் வாழ்ந்து வரும் அவர் அங்கும் ரொறன்ரோ பிராந்திய கல்விச் சபையில் ஓர் ஆலோசகராகப் பணி புரிவதுடன், தமிழ் சமூகத்தின் சிந்தனை மேம்பாட்டுக்காகவும் உழைத்து வருகிறார். அவர் வானவில்லின் ஓராண்டுப் பூர்த்தியை முன்னிட்டு எழுதிய கடிதத்தில் கூறியுள்ள இக்கருத்துக்கள், தமிழில் இயங்குகின்ற அனைத்து ஊடகங்களுக்கும் மிகவும் பயனுள்ளவை என்றபடியினால், அதை இங்கு முழுமையாகப் பிரசுரித்துள்ளோம் - நன்றி - ஆசிரியர் குழு)**

“உன் அண்ணா தீவரவாதத்தில் இறங்கியதால் தூக்கிலிடப்பட்டு இறந்தான். நீயும் ஏன் சுவருடன் மோதி மண்டையை உடைத்துக்கொள்கிறாய்” என பொலிஸ் அதிகாரி ஒருவர் லெனின் 17 வயதில் கைது செய்யப்பட்டபோது, லெனினிடம் கேட்டார். அதற்கு அந்த பொலிஸ் அதிகாரியைப் பார்த்து “என் எதிரே சுவர் இருப்பது உண்மைதான் ஆனால் பலவீனமானது, முட்டினால் உடைந்து போகும்” என லெனின் பதிலளித்தார்.

முன்பக்கத்தொடர்ச்சி...

இறுதியாக இந்த சின்னஞ்சிறு நாட்டின் இன முரண்பாட்டை உள்நாட்டு யுத்தமாக மாற்றுவதில் சர்வதேச பிற்போக்கு சக்திகள் வெற்றிபெற்றன. அரச படைகளையும் தமிழ்ப் புலிகளின் படைகளையும் யுத்த களத்தில் நீண்டகாலம் மோத வைத்து, அவை தமது அரசியல், பொருளாதார, இராணுவ மேலாதிக்கத்தை குறிப்பாக இலங்கை மீதும், பொதுவாகத் தென்னாசியப் பிராந்தியம் மீதும் நிலைநாட்ட முயன்று வந்துள்ளன.

இந்த பிற்போக்கு சக்திகள் பிரிவினைவாத பாசிச புலிகள் இயக்கத்தை பல வழிகளிலும் போசித்து வளர்த்து, அதை இலங்கைக்கு எதிரான இயக்கமாக மட்டுமின்றி, உலகின் அதி பயங்கரமான இயக்கமாகவும் மாற்றிவிட்டன. அதன் காரணமாக, அது இலங்கையில் கட்டுக்கடங்காத பயங்கரவாத செயல்களில் ஈடுபட்டதுடன், போட்டி அரசாங்கம் ஒன்றை நடாத்தும் அளவுக்கும் சென்றது. புலிகளின் இந்தப் போட்டி அரசாங்கத்தை, இலங்கையின் சட்டபூர்வமான அரசாங்கத்துக்கு சமதையாக நடாத்தும் நிலைக்கும் கூட சர்வதேச பிற்போக்கு சக்திகள் சென்றன.

ஆனால் இலங்கையின் தேசபக்திமிக்க மக்களின் முழு ஆதரவுடனும், சர்வதேச நேச சக்திகளின் உதவியுடனும் பாசிசப் புலிகள் இயக்கம் 2009 மே மாதம் இராணுவ ரீதியாகத் தோற்கடிக்கப்பட்டு, நாடு எதிர்நோக்கிய பாரிய அழிவு தவிர்க்கப்பட்டது. புலிகளைத் தோற்கடிக்கும் முகமாக நடைபெற்ற இறுதி யுத்தத்தின் போது பல மக்கள் உயிர்களை இழக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலையும் ஏற்பட்டது. அதற்கான முக்கியமான காரணம், புலிகள் தாம் இறுதி அழிவை அடைந்துவிட்டோம் என்று அறிந்த பின்னரும்கூட, தமது பாதுகாப்புக்காக ஆயிரக்கணக்கான அப்பாவிப் பொதுமக்களைப் பலவந்தமாக தம்முடன் அழைத்துச் சென்று, தமக்கு மனித கேடயங்களாக வைத்திருந்தமையே ஆகும்.

எது எப்படியிருந்த போதிலும், 30 வருடப் போர் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டு, தொடர்ந்த மனித உயிரழிவுகள் நிறுத்தப்பட்டன. தற்பொழுது யுத்தமும் வெடிகுண்டுத் தாக்குதல்களும், அதன் காரணமாக மனித உயிர்கள் அழியும் நிலைமையும் இடப்பெயர்வுகளும் எமது நாட்டில் இல்லை. இந்த அமைதிச் சூழலை ஏற்படுத்தியமைக்காக, அதைச் சாத்தியமாக்கிய இலங்கை அரசும் அதன் ஆயுதப்படைகளும் உண்மையில் பாராட்டுக்குரியவர்கள். ஆனால் அதைக் கணக்கிலெடுக்க மறுக்கும் சர்வதேச சமூகம் எனப்படும் மேற்கத்தைய முன்னாள் காலனித்துவ சக்திகள், இலங்கை மீது அபாண்டமான குற்றச்சாட்டுகளை அள்ளி வீசுகிறார்கள்.

இலங்கையில் இன முரண்பாட்டை உருவாக்கிய அவர்கள், அந்த இன முரண்பாட்டை உள்நாட்டுப் போராக மாற்றிய அவர்கள், இறுதி யுத்த நேரத்தில் புலிகள் தமது பாதுகாப்புக் கேடயமாகப் பலவந்தமாகப் பிடித்து வைத்திருந்த பொதுமக்களை விடுவிப்பதற்கு எவ்விதமான நடவடிக்கைகளையும் எடுக்காத அவர்கள், அதற்குப் பதிலாக புலித் தலைவர்களை இராணுவ முற்றுகையிலிருந்து விடுவித்துப் பாதுகாப்பாக நாட்டைவிட்டு வெளியேற்ற முயன்ற அவர்கள், இப்பொழுது இலங்கை அரசு மீது போர்க்குற்றச்சாட்டுகளையும், மனித உரிமை மீறல்களையும் சுமத்தி, இலங்கையின் சட்டபூர்வமான, மக்கள் ஆதரவு பெற்ற அரசாங்கத்தை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் நிறுத்த முயல்கின்றன.

இலங்கை அரசாங்கம் தனது படைகள் இழைத்ததாகக் கூறப்படும் உரிமை மீறல்களை விசாரித்து, அது சம்பந்தமாக நடவடிக்கைகளை எடுப்பதற்காக நியமித்த உண்மைகளைக் கண்டறிவதற்கும் நல்லிணக்கத்துக்குமான ஆணைக்குழுவின் பரிந்துரைகளைக்கூட, இலங்கை அரசு நடைமுறைப்படுத்துவதற்கு கால அவகாசம் வழங்காமல், இந்த விரோத சக்திகள் அடாவடித்தனமாக செயற்பட முனைகின்றன. இதிலிருந்தே அவர்களது உள்நோக்கங்கள் புலனாகின்றது.

கொடிய உள்நாட்டுப் போரை முடிவுக்குக் கொண்டு வந்து, நாட்டை ஒருமைப்படுத்தி, நாட்டைப் பொருளாதார ரீதியில் சுபீட்சப் பாதையில் கொண்டு செல்வதற்கு அரசாங்கம் முயன்று வரும் இன்றைய சூழலில், இந்த தேச விரோத சக்திகள் இலங்கையில் மீண்டும் பிரிவினைவாதத்தைத் தூண்டவும், குழப்பங்களை உருவாக்கவும் பல்வேறு சுலோகங்களின் கீழ் பிரயத்தனப்பட்டு வருகின்றனர்.

எனவே இந்த நெருக்கடியான நேரத்தில், இலங்கையை நிலைகுலைய வைப்பதற்கு அந்நிய சக்திகள் எடுத்து வரும் சகலவிதமான சதி சூழ்ச்சிகளையும், அதற்கு உதவிவரும் உள்நாட்டுத் துரோக சக்திகளின் நடவடிக்கைகளையும் முறியடிப்பதற்கு, தேசபக்தியும் ஜனநாயக நேசிப்பும் கொண்ட அனைத்து இலங்கையர்களும் இன, மொழி, மத பேதமின்றி அணிதிரள வேண்டும் என அறைகூவி அழைக்கின்றோம். *

**நாட்டில் குற்றம் நடப்பதைக் கண்டு ஒதுங்கி நிற்பவர்கள் வாழ்வில் எதனையும் சாதிக்க மாட்டார்கள். குற்றம் கண்டு கொதிப்பவனுக்கு எதுவும் சாத்தியமே! அவனால் நாட்டையே கட்டியெழுப்ப முடியும்.**

**- செக்கோஸ்லாவாக்கியாவின் புரட்சிக்கவிஞன் நெருடா**

## திரிகோணமலை – மன்னார் மாவட்டங்களில் நெற்செய்கை அதிகரிப்பு!

புலிகள் மாவிலாறு அணையை மூடி பல்லாயிரம் தமிழ், சிங்கள, முஸ்லீம் விவசாயிகளின் வயிற்றில் அடித்த திரிகோணமலை மாவட்டத்தில், தற்போது விவசாயிகள் மிகவும் உற்சாகத்துடன் காலபோக நெல் அறுவடையில் ஈடுபட்டு வருகின்றனர். இம்மாவட்டத்தின் தம்பலகாமம், கந்தளாய், மூதூர், கிண்ணியா, சேருவல ஆகிய கமநல சேவைப்பிரிவுகளைச் சேர்ந்த 42 ஆயிரம் ஹெக்டர் நிலப்பரப்பில் இவ்வருடம் பெரும்போக நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டு இருந்தது. இந்த நெற்செய்கையின் மூலம் இவ்வருடம் 1 இலட்சத்து 80 ஆயிரம் மெற்றிக் தொன் நெல் அறுவடை எதிர்பார்க்கப்படுகிறது.

இங்குள்ள வயல்களில் சராசரியாக ஏக்கர் ஒன்றுக்கு 30 மூடைகள் நெல் விளைகின்றது. ஒரு மூடை நெல் 1,650 ரூபாவுக்கு விவசாயிகளால் விற்பனை செய்யப்படுகிறது.

அதேவேளை, மன்னார் மாவட்டத்திலும் 35,485 ஏக்கரில் இம்முறை நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக மாவட்டத்தின் பிரதி விவசாயப் பணிப்பாளர் கே.எம்.ஏ. சுக்கூர் தெரிவித்துள்ளார். அடுத்த காலபோகத்தில் தொகையை அதிகரித்து 51,465 ஏக்கரில் நெற்செய்கை செய்வதற்குத் திட்டமிடப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

இந்த இரு மாவட்டங்களும் நீண்டகாலமாக புலிகளின் கட்டுப்பாட்டின் கீழ் இருந்த காரணத்தால், அங்குள்ள மக்கள் விவசாயத்தில் ஈடுபட முடியாமல் பெரும் கஸ்டங்களை அனுபவித்து வந்தனர். புலிகள் அழிக்கப்பட்டு போர் முடிவுற்றதைத் தொடர்ந்து, மீண்டும் தமது விவசாய நடவடிக்கைகளில் முழு வீச்சில் ஈடுபட ஆரம்பித்துள்ளனர். *

உலகைச் சுற்றிப்பார் விழித் தெழுந்து,  
மறுமுறையும் மனிதப் பிறப்பு வாய்க்குமா உனக்கு?  
மனிதப் பிறப்பு தொடர்ந்தாலும்  
மறுமுறையும் இளமை கிடைக்குமா உனக்கு?

**– ராகுல் சாங்கிருத்யாயன்**

## இலங்கையில் தைப்பொங்கல் தேசிய விழாவாகப் பிரகடனப்படுத்தப்பட்டுனள்ளது!

### தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சின் ஊடகச் செயலாளர் மஹேந்திர ஹரிச்சந்திர பின்வரும் அறிக்கையினை ‘வானவில்’ பிரசுரத்திற்காக அனுப்பி வைத்துள்ளார்:

இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் அதி உத்தம ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச அவர்களின் அரசாங்கத்தில் தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சராக இருக்கும் கௌரவ வாசுதேவ நாணயக்கார அவர்களின் ஆலோசனையின் பேரில், 2012ம் ஆண்டு தைத்திருநாளானது தேசிய தைப்பொங்கல் உற்சவமாக இம்முறை நுவரெலியா மாவட்டத்தின் தலவாக்கலை நகரில் அமைந்துள்ள ஸ்ரீ கதிரேசன் கோவிலில் வெகு கோலாகலமாக நடைபெற்றது.

இவ்விழா நுவரெலியா மாவட்ட அரசாங்க அதிபர் டி.பி.ஜி. குமாரசிரி, நுவரெலியா பாராளுமன்ற உறுப்பினர் பி.திகாம்பரம், தலவாக்கலை - லிந்துல நகரசபைத் தலைவர் அசோக மற்றும் இந்து, பௌத்த, கிறிஸ்தவ, இஸ்லாம் மதப் பெரியவர்களின் பங்குபற்றுதலுடன் சிறப்பாக நடைபெற்றது

இதில் விசேட அம்சம் யாதெனில், கடந்த வருடம் ஜேர்மனி நாட்டில் இடம்பெற்ற உலகத் தமிழர் பண்பாட்டு இயக்கத்தின் 11வது மாநாட்டில் தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சின் சார்பிலும், அமைச்சர் வாசுதேவ நாணயக்கார அவர்களின் சார்பிலும் கலந்து கொண்ட அமைச்சரின் ஒருங்கிணைப்புச் செயலாளர் கலாநிதி சிதம்பரம் மோகனிடம், உலகத் தமிழர் பண்பாட்டு இயக்கத்தின் செயலாளர் நாயகம் தமிழ் பணிச்செம்மல் துரை.கணேசலிங்கம் அவர்களால் இலங்கையில் பொங்கல் விழாவை அரச விழாவாக அமுல்படுத்த வேண்டும் என்று வேண்டுகோள் விடுக்கப்பட்டது. அது இன்று நிறைவேற்றப்பட்டு உலகத் தமிழரையும், இலங்கைத் தமிழரையும் கௌரவிக்கும் வண்ணம் பிரகடனப்படுத்தப்பட்டது. *